# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 27/2022

வா.சா.1– குறுக்கு விசாரணை தொடர்ச்சி– நாள் 08–04–2025.

பெயர் = முனியசாமி வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 2ம்பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) நான் தாவாச்சொத்தை எத்தனை வருட காலமாக அனுபவித்து வருகிறேன் என்றால் எனது அப்பாவின் சொத்து. தாவாச்சொத்தானது ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் அந்த விவரம் எனது தந்தைக்குதான் தெரியும் எனக்குத் தெரியாது. மேற்படி விவரத்தை என் தந்தை என்னிடம் சொல்லாமல் இறந்துவிட்டார். முருகன் என்பவரும் நானும் உடன்பிறந்தவர்கள் என்றால் ஆமாம். பொன்னுத்தாய் என் தாய் ஆவார். நிரூபணவாக்குமூலத்தின் 2வது பாராவில் கூறியுள்ள சங்கதிகளுக்கு கொடிவழிஜாபிதா இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள கொடிவழிஜாபிதாவில் மூக்கையா என்ற மூக்கன் என்பவரும் வா.சா.ஆ.7 பட்டாவில் குறிப்பிட்டுள்ள மூக்கன் ஏகாளி என்பவரும் வெவ்வேறு நபர்கள் என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6ல் மூக்கையா என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி ஆவணத்தில் வேற்றுமையோ, ஒற்றுமையோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு நீதிமன்ற ஆணையர் தாவாச்சொத்தை பார்வையிடும்போது நான் உடன் இருந்தேன்.

(2) நீதிமன்ற ஆணையர் தாவாச்சொத்தை அளவிடும்போது வடக்குநோக்கி தெற்கு செல்கின்ற தார்ச்சாலையிலிருந்து நான்குமால் குறிப்பிட்டு அளவிடப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி இடத்திலிருந்து புறப்பட்ட நான்குமாலானது மூன்று குடியிருப்பு வீடுகளுக்கு தாண்டி சென்றது. முதல் வீடு என்னுடையது. என்னுடைய வீட்டிற்கு மேற்குபக்கம் 1ம் பிரதிவாதி ஆனந்த் ஆக்கிரமித்து வைத்துள்ள இடம். 1ம் பிரதிவாதி வீட்டிற்கு மேற்குபக்கம் 2வது பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ள காலியிடம். மேற்படி இடமும் ஆக்கிரமிப்பு இடமே ஆகும். மேற்படி

இடம் காலியிடம் இல்லை என்றால் சரியல்ல. மேலும், மேற்படி இடத்தில் கட்டிடம் எழுப்பப்பட்டு மேற்கூரை இல்லாமல் குளியலறையாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி இடத்தை சாந்தி என்பவர் ஆக்கிரமித்து வைத்துள்ளார். சாந்தி ஆக்கிரமித்துள்ள விவரம் எனக்கு நீதிமன்ற ஆணையர் அளந்த பின்பு தான் தெரியவந்தது. சாந்தி ஆக்கிரமித்துள்ள விவரத்தை எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்சொன்ன இடத்துக்கு தெற்குபுறம் தான் 2ம் பிரதிவாதி மாரியம்மாளின் வீடு உள்ளது என்றால் ஆமாம். மேற்படி வீடு ஓட்டு வீடு என்றால் இல்லை காரை வீடு ஆகும். மேற்படி வீட்டிலிருந்து தென்புறத்தில் சுமார் 10 அடி தூரத்தில் தாழ்வாரம் உள்ளது என்றால் ஆமாம். 2ம் பிரதிவாதியின் தாழ்வாரம் உள்ளது. மேற்படி தாழ்வாரத்திற்கு தென்புறத்தில் 5 முதல் 7 அடி தூரத்தில் வேப்பமரம் உள்ளதா என்றால் இல்லை வாய்க்கால் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் நீ.ம.சா.ஆ.2 நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல் 2ம் பிரதிவாதி வீட்டிற்கு தென்புறம் வேப்பமரம் உள்ளது என்றால் சரிதான். (சாட்சி திசைகள் தெரியாமல் மாற்றி தவறாக சொல்லிவிட்டேன் என்று கூறினார்)

(3)மேற்படி வேப்பமரத்திற்கு தென்புறம் 5 முதல் 10 அடி வரையுள்ள இடம் காலியிடமாகத்தான் உள்ளது என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் வாறுகால் அல்லது வாய்க்கால் ஏதெனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்குபுறம் யாருடைய வீடு உள்ளது என்றால் சாந்தி வீடு உள்ளது. சாந்திவீட்டிற்கும் 2ம் பிரதிவாதி வீட்டிற்கும் இடையே சுமார் 3 அடி சந்து உள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் வீட்டிற்கு வடக்குபுறம் மண்சுவரால் எழுப்பப்பட்ட தாழ்வாரம் உள்ளது. மேற்படி மண்சுவரானது எழுப்பப்பட்டு 30 முதல் 40 வருடங்கள் இருக்குமா என்றால் நான் பிறப்பதற்கு முன்பிருந்தே இருக்கிறது. மேற்படி வீட்டில் 2ம் பிரதிவாதி மேற்படி காலகட்டத்திலிருந்து குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வா.சா.ஆ.17ல் 17.02.2021ம் தேதியிட்ட ஆவணமான அ பதிவேட்டில் புல எண்.31 எனவும், உட்பிரிவு 1B1A எனவும், பழைய உட்பிரிவு 31–1B1 எனவும் ரயத்துவாரி என வகைப்பாடும், நிலவரி புஞ்சை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எனது பெயரில் உள்ளது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆவணம் அ பதிவேட்டில் மேற்படி புல எண் மற்றும் உட்பிரிவு மூக்கன் ஏகாளி என்ற பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நிலவகைப்பாட்டில் வீடு என குறிப்பிட்டுள்ளது என்றால்

சரிதான். ஏற்கனவே வீடு இருந்தது தற்போதும் வீடு தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரை பற்றி தெரியுமா என்றால் எனக்குத் தெரியும் நான் படித்துள்ளேன். மேற்படி எதிர்வழக்குரையின் பாரா−5ல் சொல்லியுள்ளவாறு எங்கள் குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் ஏற்படுத்திக்கொண்ட செட்டில்மெண்ட் ஆவண எண்.174/2018 மூலமாக நான் தாவா இடத்திற்கு நான்குமால் விஸ்தீரணம் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பட்டா எண்.511ன்படி தான் நான் நான்குமால் விஸ்தீரணம் குறிப்பிட்டுள்ளேன்.

(4) 2ம் பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையின் பாரா−11ல் கடந்த 04.09.1984ம் ஆண்டில் தாவாச்சொத்தை முத்துரெட்டியார் மகன் அய்யணன் ரெட்டியார் தனக்காகவும் தன் மகனுக்காகவும் திருச்சுழி சார்பதிவாளர் ஆவண எண்.1369ன் படி கிரையம் பெற்றுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தைப்பற்றி எனது தரப்பில் இவ்வழக்கிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மேற்படி ஆவணத்தைப்பற்றிய முழுவிவரம் பற்றி தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி ஆவணத்தில் என் தந்தை ஒரு சாட்சியாக இருந்த விவரம் தெரிந்து கொண்டு பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தான் கிரையம் பெற்ற காலம் முதல் தற்போது வரை தாவாச்சொத்தில் யாருடைய இடையூறும் இல்லாமல் அனுபவம் செய்து வருகிறார் என்றும், வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 2018க்கு பின்னிட்டு உள்ள ஆவணங்கள் என்றும், இவ்வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்து குறித்தும் அதன் விஸ்தீரணம் குறித்தும் எவ்வித விவரமும் தெரியாமல் 2ம் பிரதிவாதியை அலைக்கழிக்கும் எண்ணத்தில் பிறரின் தூண்டுகோளுக்கிணங்க இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அடிப்படை முகாந்திரம் இல்லாத இவ்வழக்கை 2ம் பிரதிவாதியின் வேண்டுகோளுக்கிணங்க செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.